**சனாதிபதி நிதியம் - 2015**

-----------------------------------------------

சனாதிபதி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

சனாதிபதி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 159,124,409 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 474,631,939 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மிகையில் ரூபா 315,507,530 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து பெறுவனவுகள் ரூபா 333,398,900 இனால் குறைவடைந்தமையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 27,900,000 வட்டி பதிவழித்தல்களும் மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1978 இன் 07 ஆம் இலக்க ஜனாதிபதி நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் நோக்கமாக வறுமைக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும், கல்வி அல்லது அறிவை விருத்தி செய்வதற்காகவும், மதங்களைக் கட்டி எழுப்புவதற்காகவும், நாட்டிற்காக சேவையாற்றிய நபர்களுக்கு மானியங்களை வழங்குதல் மற்றும் பொது மக்களின் சுகநலன்கள் அல்லது நல்வாழ்வுக்கு தேவையான ஏனைய ஏதாவது பணிகளுக்காக நிதி வழங்குதல் எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள், கலாச்சார நடவடிக்கைகள், மதச் செயற்பாடுகள், நலன்புரி நடவடிக்கைகள், கல்விச் செயற்பாடுகள், விளையாட்டு மற்றும் கலை நடவடிக்கைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப் பரிசில்களை வழங்குதல், விசேட செயற்திட்டங்கள் என்பவற்றிற்காக ரூபா 1,026,067,188 செலவு செய்யப்பட்டிருந்தன. அந்த மொத்தச் செலவுகளில் மருத்துவ உதவிக்காக ரூபா 900,556,661 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 05 பொதுமக்கள் பிரதிநிதிகளுக்காக ரூபா 6,117,406 தொகையும், ஏனைய தரப்பினர் 6045 பேருக்காக ரூபா 894,439,255 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. அத்தொகையானது மொத்தச் செலவுகளில் 87.7 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு புலமைப் பரிசில்களுக்காக மொத்தச் செலவில் 8.6 சதவீதமும் நிதியத்தின் ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 3.7 சதவீதமும் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 4,584 இருதய சத்திர சிகிச்சைகளுக்காக ரூபா 667,499,877 தொகையும் 451 புற்றுநோய் சிகிச்சைகளுக்காக ரூபா 50,903,468 தொகையும் 336 சிறுநீரக மாற்று மற்றும் குருதி சுத்திகரிப்பு சிகிச்சைகளுக்காக ரூபா 66,177,256 தொகையும், ஏனைய 679 சிகிச்சைகளுக்காக ரூபா 115,976,061 தொகையும் மருத்துவ உதவியாகச் செலவு செய்யப்பட்டிருந்தன. முன்னய ஆண்டின் போது

5,892 நோயாளர்களுக்கு ரூபா 810,385,663 செலவு செய்யப்பட்டதுடன் ஒப்பிடுகையில் நோயாளர்களின் எண்ணிக்கை 158 ஆல் அதிகரித்திருந்ததுடன் மருத்துவ உதவிச் செலவுகள் ரூபா 90,170,998 இனால் அதிகரித்திருந்தன.

(இ) கல்விச் செயற்பாடுகள் மற்றும் மத ரீதியான செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளில் முறையே 17.9 சதவீதத்தினாலும் 75.7 சதவீதத்தினாலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருந்தது.

**4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 195,000,000 கடனுக்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய திரண்ட கடன் வட்டி ரூபா 343,806,164 ஆக இருந்ததுடன் 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தின் போது இணங்கப்பட்டதன் பிரகாரம் அதில் ரூபா 27,900,000 மீளாய்வாண்டின் வருமானக் கூற்றிலிருந்தும் ரூபா 315,906,164 தொகை நிறுத்தி வைத்த இலாபத்திலிருந்தும் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**4.3 பதவியணியினர் நிர்வாகம்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சனாதிபதி செயலகத்தில் நிரந்தர சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களில் சிரேஷ்ட உதவிச் செயலாளர், கணக்காளர்களை உள்ளடக்கிய 35 உத்தியோகத்தர்கள் நிதியச் சேவைக்காக இணைக்கப்பட்டிருந்தனர்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்தபோது 36 சதவீதத்திலிருந்து 813 சதவீதம் வரையிலான வீச்சுடைய முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**நிதிச் செயலாற்றல் கூற்று**

**-------------------------------------------**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியத்தின் வருமானம் மற்றும் செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| **விபரம்** | **2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக** | |
|---|---|---|
| **வருமானம்** | **2015**<br>**ரூபா.** | **2014**<br>**ரூபா.** |
| பங்களிப்பு பெறுவனவு | 44,006,333 | 65,255,844 |
| வட்டி வருமானம் | 177,936,245 | 214,931,518 |
| அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து பெறுவனவு | 1,727,063,739 | 2,060,462,639 |
| | 1,949,006,317 | 2,340,650,001 |
| **செலவுகள்** | | |
| கணக்காய்வுக் கட்டணம் | 160,000 | 160,000 |
| மருத்துவ உதவிக் கொடுப்பனவு | 900,556,662 | 810,385,663 |
| கலாச்சார நடவடிக்கைகள் | 2,750,000 | 1,225,000 |
| சமயச் செயற்பாடுகள் | 3,650,000 | 15,050,000 |
| நலன்புரி நடவடிக்கைகள் | 8,557,477 | 8,715,000 |
| கல்வி நடவடிக்கைகள் | 1,100,000 | 1,340,000 |
| புலமைப்பரிசில் உத்தேசத்திட்டத்தின் செலவுகள் | 87,853,050 | 110,774,000 |
| விசேட செயற்திட்டம் | 20,000,000 | 20,000,000 |
| விளையாட்டு மற்றும் கலை நடவடிக்கைகள் | 1,600,000 | 600,000 |
| மஹாபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்திற்கு 50% பங்களிப்பு | 735.754,719 | 897,768,399 |
| கிடைக்கவேண்டிய வட்டி பதிவழித்தல் | 27,900,000 | - |
| | 1,789,881,908 | 1,866,018,062 |
| செலவை விஞ்சிய வருமான மிகை | 159,124,409 | 474,631,938 |

**<u>பின்னிணைப்பு- 02</u>**

**நிதியத்திற்கு சொந்தமான பணத்தை முதலீடு செய்தல் தொடர்பான கூற்று**

---------------------------------------------------------------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்குச் சொந்தமான பணத்தை முதலீடு செய்வது தொடர்பான விபரம் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| முதலீட்டு வகை | 2015 சனவரி 01 இல் உள்ளவாறு மீதி | 2015 ஆம் ஆண்டில் முதலீடு | 2015 ஆம் ஆண்டில் மீளப் பெறல் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புக்கள் | 1,390,125,000 | 307,567,500 | 75,125,000 | 1,622,567,500 |
| மக்கள் வங்கியில் நிலையான வைப்புக்கள் | 12,080,000 | 100,780,000 | 80,000 | 112,780,000 |
| இலங்கை வங்கியில் நிலையான வைப்புக்கள் | 250,825,000 | - | 250,825,000 | - |
| அபிவிருத்தி லொத்தர் சபையில் முதலீடு | 2,200,000 | - | - | 2,200,000 |
| திறைசேரி முறிகள் | 338,790,000 | - | - | 338,790,000 |
| | 1,994,020,000 | 408,347,500 | 326,030,000 | 2,076,337,500 |